# குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறை
## மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகம், சேலம்.

## <u>பத்திரிக்கைச் செய்தி</u>

குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறையின் கீழ் சேலம் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகம் செயல்பட்டு வருகிறது. இதில் புதியதாக பாதுகாப்பு அலுவலர் (நிறுவனம் சாரா) – 01 பணியிடம் தொகுப்பூதியம் ரூ.27,804/- என்ற அடிப்படையிலும், சிறப்பு சிறார் காவல் அலகிற்கு - 2 சமூகப்பணியாளர் வீதம் சேலம் மாவட்டம் மற்றும் மாநகரத்திற்கு என மொத்தம் 4 சமூகப்பணியாளர்கள் பணியிடம் ஒரு மாதத்திற்கு ரூ.18,536/- தொகுப்பூதியமாகவும், ஒரு வருட ஒப்பந்த அடிப்படையில் மிஷன் வாத்சல்யா வழிகாட்டு நெறிமுறைகளின் படி கீழ்க்கண்ட தகுதிகளை கொண்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றது.

1. **பாதுகாப்பு அலுவலர் (நிறுவனம் சாரா) *(Protection Officer - (Non-institutional Care) – 1* பணியிடம்**

சமூகப்பணி *(Social Work)* / சமூகவியல் *(Sociology)* / குழந்தை வளர்ச்சி / மனித உரிமைகள் / பொது நிர்வாகம் / உளவியல் / மனநலம் / சட்டம் / பொது நலம் / சமுதாய வள மேலாண்மை ஆகிய ஏதேனும் ஒரு பாடப்பிரிவில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் முதுகலை பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

*(அல்லது)*

மேற்காணும் ஏதேனும் ஒரு பாடப்பிரிவில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் இளங்கலை பட்டத்துடன், பெண்கள் மற்றும் குழந்தை வளர்ச்சி / சமூக நலன் தொடர்பான பணிகளில் திட்டம் தயாரித்தல்/ செயல்படுத்துதல் / கண்காணித்தல் / மேற்பார்வையிடுதல் தொடர்பாக குறைந்தபட்சம் 2 ஆண்டுகள் பணியாற்றிய அனுபவம்

பெற்றிருக்க வேண்டும். மற்றும் கணினியில் அறிவுத்திறமை பெற்றிருக்க வேண்டும். 10.01.2025 அன்று 42 வயதிற்கு மிகாமல் இருத்தல் வேண்டும். குழந்தைகள் நலன் தொடர்புடைய பணிகளில் பணிபுரிந்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

2. **சமூகப்பணியாளர் (Social Worker) – 4 பணியிடங்கள்**

சமூகப்பணி (Social Work) / சமூகவியல் (Sociology) / சமூக அறிவியல் (Social Science) ஆகிய ஏதேனும் ஒரு பாடப்பிரிவில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் இளங்கலை பட்டத்துடன் கணினியில் அறிவுத்திறமை பெற்றிருக்க வேண்டும். மேற்காணும் தகுதிகளுடன் சமுகப்பணியில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். 10.01.2025 அன்று 42 வயதிற்கு மிகாமல் இருத்தல் வேண்டும். குழந்தைகள் நலன் தொடர்புடைய பணிகளில் பணிபுரிந்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

மேற்கண்ட பணியிடத்திற்கு விண்ணப்பத்துடன் உரிய சான்றிதழ்களையும் இணைத்து 31.01.2025 அன்று மாலை 5.30 மணிக்குள் கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்க தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும் விவரங்களுக்கு மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகத்தை தொடர்புக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**<u>விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:</u>**

மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர்,
மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகம்,
அறை எண். 415, நான்காவது தளம்,
மாவட்ட ஆட்சியரகம், சேலம் - 636001.
தொலைபேசி எண். 0427 - 2415966

**மாவட்ட ஆட்சியர்,**
**சேலம்.**